**செ.வெ.எண்: 02/2019** **நாள்: 02.12.2019**

# திருப்பூர் மாவட்டம்

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செய்தி வெளியீட்டின் அடிப்படையின்படி திருப்பூர் மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் டிசம்பர் மாதம் 27 மற்றும் 30 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக நடைபெறும். இதற்கான தேர்தல் அறிவிக்கை 06.12.2019 அன்று வெளியிடப்படும். வேட்பு மனு தாக்கல் 06.12.2019 முதல் துவங்கும். தேர்தல் நாளன்று வாக்குப்பதிவு காலை 07.00 மணிக்கு துவங்கி மாலை 05.00 மணியுடன் முடிவடையும் வாக்கு எண்ணிக்கை 02.01.2020 அன்று காலை 08.00 மணிக்கு தொடங்கும்.

## <u>தேர்தல் அட்டவணை</u>

| | |
|---|---|
| 1.தேர்தல் அறிவிப்பு பிரசுரித்தல் மற்றும் வேட்பு மனுக்கள் பெறுதல் | 06.12.2019 |
| 2.வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | 13.12.2019 |
| 3.வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல் | 16.12.2019 |
| 4.வேட்பு மனுக்களை திரும்ப பெறுதல் | 18.12.2019 |
| 5.வாக்குபதிவு நடைபெறும் நாள் | |
| (1)முதல்கட்ட வாக்குபதிவு | 27.12.2019 |
| (2)இரண்டாம் கட்ட வாக்குபதிவு | 30.12.2019 |
| 6.வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 02.01.2020 |
| 7.தேர்தல் நடவடிக்கைகள் முடிவு பெறும் நாள் | 04.01.2020 |
| 8.தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள்மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களின் முதல்கூட்டம் மற்றும் பதவியேற்பு நாள் | 06.01.2020 |
| 9.மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்/ துணைத்தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத்தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தலுக்கான கூட்ட நாள் | 11.01.2020 |

**நேர்முகத் தேர்தல் நடைபெறவிருக்கும் பதவியிடங்கள்**

திருப்பூர் மாவட்டத்தில் 17 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 170 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், 265 ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் 2295 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களை தேர்வு செய்ய தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கு 28 தேர்தல் நடத்தும் அலுவலர்களும் மற்றும் 363 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்டத்தில் ஊரக (கிராமப்புறம்) மொத்த வாக்காளர்கள் 995765 உள்ளனர். மேற்படி வாக்காளர்கள் வாக்குபதிவு செய்ய வசதியாக ஊரகப்பகுதிகளில் (கிராமப்புறம்) 1704 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் குடிநீர் மின்சார வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன. மேற்படி, 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1704 வாக்குச்சாவடிகள் 129 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணிக்கைக்கு 13 வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**